

# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2018 டிசெம்பர் வெளியீடு

**காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்.**

மத்தேயு 6:28

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.


**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# நான் அவன் தேவனாயிருப்பேன்

## ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்து கொள்ளுவான் நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் (வெளிப்படுத்தல் 21: 7)

ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்ற ஒரு கூட்டத்தினரை தேவன் எல்லா வேளைகளிலும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார். அநேகமானோர் மாபெரும் சோதனைகளையும், வேதனை நிறைந்த பாரங்களை சுமக்கவும், ஆறாத்துயரங்களை பொறுமையுடன் சகிக்கவும் வேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால், இந்த அனுபவங்களின் மூலமாக அவர்கள் பயிற்சியும், தகுதியும் பெற்று, எந்த மனுஷனும் எதிர்பார்க்கவோ, எண்ணிப்பார்க்கவோ முடியாத அளவிற்கு வரப்போகின்ற தேவனுடைய இராஜ்யத்தின் மிகச்சிறந்த பங்கையும், அந்தஸ்தையும் அவர்களுக்கு கொடுப்பதற்காக தேவன் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றார். ஆதலால், நாமெல்லாருமே ஜெயங்கொள்கிறவர்களாயிருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

மேற்குறிப்பிட்ட வாக்குத்தத்த வசனத்தின்படி, வெற்றி வாழ்க்கை நடத்தி ஜெயங்கொள்கிறவர்களுக்கே, பழைய சிருஷ்டிப்பிலுள்ள எல்லா ஆசீர்வாதங்களையுந் தவிர, புதிய சிருஷ்டிப்பிலுள்ள எல்லா ஈவுகளையும் தேவன் அவர்களுக்கு அள்ளி வழங்க ஆயத்தமாயிருக்கிறார்.

அநேகருக்கு இரட்சிப்பு என்பதே தெரியாத வேளையில், பரலோகத்திற்குச் செல்பவர்களுக்கு தேவன் என்னென்ன திட்டமெல்லாம் வைத்திருக்கிறார் என்பதை எவ்விதமாக அறிந்து கொள்வர்? எவ்வளவு பெரியதும், மகத்துவமும், மகிமையுமான ஆவிக்குரிய பரலோக சுதந்திரமானது ஜெயங்கொள்கிறவர்களுக்காகவே வைக்கப்பட்டிருக்கிறது! இவற்றையுந் தவிர இந்நடைமுறை வாழ்வில் தேவன் இவர்களை தம்முடைய கருவிகளாக(ஆயுதங்களாக) பயன்படுத்தி பிசாசையும், அவனது சேனைகளையும் தோற்கடித்து வெட்கப்படுத்துகிறார். இவ்வாறு கர்த்தரின் திருக்கரங்களில் மேன்மையான கருவிகளாக பயன்படுவது எத்தனை பெரிய சிலாக்கியம்.

தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக .. எபேசியர் 3: 9,10

நாம் தேவனுடைய நித்தியமான நோக்கங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு உடன் வேலைக்காரராகவும், பங்குதாரராகவும் இருக்கும்படி, தேவன் திட்டம் இட்டிருக்கிறார். சாத்தானானவன் கலகம் ஆரம்பித்த அன்றே அவனைத் தண்டிக்காமல் விட்டு வைத்தது ஏன்? என்று சிலர் கேள்வி கேட்கின்றனர். தேவன் அவனை அவ்வேளையிலேதானே தண்டித்திருப்பாரேயானால், பாவங்கள் இந்த உலகத்தில் இருந்திருக்காது. இந்த சாபங்களும், சோதனைகளும் மனுஷரை ஆட்கொள்ளவும் அவற்றிலிருந்து தேவன் அளிக்கிற பரம விடுதலையின் மார்க்கமும் வெளிப்பட்டிருக்காது. தேவன் தம்முடைய அளவற்ற அநாதி சிநேகத்தின் படியே, மனிதனை தம்முடைய கூட்டாளியாகவும், உடன் ஊழியக்காரனாகவும் பக்குவப்படுத்தி உயர்த்துவதற்காகவே தேவன் இவ்வுலகினில் பாவத்தை அனுமதித்தார். தேவனை அறியாதோர் தேவத்துவத்தை தலைகீழாய் நின்று ஆராய்ந்தாலும் இதுவே மாறாத பரம சத்தியம். வேதத்தின் இரகசியம்!

- Bro. Bakth Singh -

# விட்டுக்கொடுப்பதின் விளைவு

எமக்குரியதை விட்டுக்கொடுப்பது அல்லது நஷ்டத்தை சகிப்பது என்ற இவ்வரிய பண்பு கிறிஸ்தவர்கள் மத்தியிலும் கூட அரிதாகவே காணப்படுகிறது. இக்குணவியல்பு உள்ளவர்கள் சுயநலம் இல்லாதவர்களாகவும், பொருளாசையை சாராதவர்வர்களுமாய் இருந்தாலும் இவர்கள் ஆசீர்வாதமானவர்களே! வேதத்தில் நாம் ஈசாக் என்ற ஒரு தேவ மனுஷனை பார்க்கிறோம். அவனுடைய விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக ஆதியாகமம் 26:13-25 வரையிலுள்ள ஒரு சம்பவத்தை காண்போம்.

தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்த பின் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின் படியே அவைகளுக்குப் பேரிட்டான்.

ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள். கேராரூர் மேய்ப்பர் இத்தண்ணீர் தங்களுடையது என சொல்லி, ஈசாக்கின் மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணினார்கள். அவர்கள் தன்னோடே வாக்குவாதம் பண்ணினதால், அத்துரவுக்கு ஏசேக்கு என பேரிட்டான். வேறொரு துரவை வெட்டினார்கள் அதைக்குறித்தும் வாக்குவாதம்பண்ணினார்கள். ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்டான்.

பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்து போய், வேறொரு துரவை வெட்டினான் அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை. அப்பொழுது அவன்: நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்போது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் (விசாலமான இடம்) என்று பேரிட்டான். அங்கேயிருந்து பெயர்செபாவுக்குப் போனான்.

அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடே கூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருக பண்ணுவேன் என்றார்.

ஒரு குறிப்பிட்ட காலம்வரை தொந்தரவுகள் தொடர்ந்து வரும். நாம் அவைகளுக்கு(அவர்களுக்கு) எப்படி முகங்கொடுக்கிறோம்! ஈசாக்கைப்போல செயல்பட முடியுமா?

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடையது என்று சொல்கிறவைகளில் மற்றவர்களுக்கு கொடுப்பதிலும், விட்டுக்கொடுப்பதிலும் எவ்விதமான சிந்தையுடன் செயல்படுகிறோம். ஆண்டவராகிய இயேசு இதைப்பற்றி என்ன சொல்லுகிறார் "உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு.

"ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" மத்தேயு 5:40. "உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு. உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்ப கேளாதே" லூக்கா 6:30

நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாய் இருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட

நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தை பொறுத்துக்கொள்ளுகிறதில்லை? என்று அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 6:7ல் கேட்கிறார்.

ஆதி 26:24 ல் தேவன் ஈசாக்கை சந்தித்து ஆசீர்வதிக்கிறார். ஈசாக்கின் தேவன் நம் தேவன் அல்லவா? நமக்கு நேரிடுகிற எல்லாவற்றையும் கண்காணிக்கிறவராய், எமது இழப்புகளுக்கு நம் தேவன் பலன் அளிக்கிறவராய் இருக்கிறார். விட்டுக் கொடுப்பதின் விளைவு விசாலமான ஆசீர்வாதம்.

- Sis. Tilaka -




"ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" மத்தேயு 5:40.

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### 1 சாமுவேல்

அதிகாரங்கள் : 31

வசனங்கள் : 810

**சிறப்பம்சங்கள்**

- சாமுவேல் என்பதற்கு "தேவனின் பெயர்" என்று அர்த்தம்
- சாமுவேல் லேவி கோத்திரத்தான் 1 நாளாகமம் 6:33-38
- சாமுவேல் தான் இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதி அப்போஸ்தலர் 13:20
- சாமுவேலே தீர்க்கதரிசனங்களின் ஆரம்பமாக கருதப்பட்டான் அப்போஸ்தலர் 3:24
- சாமுவேலும் ஓர் நசரேயன் 1 சாமு 1:11, எண் 6:1-21
- இறந்த பின் ஆவியாய் வந்து பேசியதாக வேதத்தில் உள்ள ஒரே ஒருவன் சாமுவேல் 1 சாமுவேல் 28:7
- சாமுவேல் ஓர் ஜெபவீரன் சங்கீதம் 99:6
- தேவன் இருமுறை பெயர் சொல்லி அழைத்தவர்களில் சாமுவேலும் ஒருவன். 1 சாமுவேல் 3:10

# கறைப்படுத்தும் நட்பு

நம்பிக்கையின் வீடு (கனடா) எனும் சஞ்சிகையிலிருந்து

சோப்ரோனியஸ் என்ற கிரேக்க அறிஞர் ஒரு சிறந்த தத்துவ ஆசிரியர். சிறு பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுப்பதில் சிறந்தவர். தன் மகளோ, மகனோ ஒழுக்கமற்றவர்களோடு பழகுவதை அவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்.

ஒருமுறை அவரது பிள்ளைகள் விருந்து ஒன்றில் கலந்து கொள்ள அனுமதி கேட்டனர். இவரோ அங்கு சில நற்செயல்களற்றவை நடக்குமென்பதையும், நன்னடத்தையற்ற சிலரும் வருவர் என அறிந்திருந்ததால் பிள்ளைகளுக்கு அனுமதிகொடுக்க மறுத்து விட்டார். அவரது மகன் "அப்பா நீங்கள் நினைப்பது போல் ஆபத்திலும், பாவத்திலும் சிக்கிக் கொள்வதற்கு நாங்கள் ஒன்றும் சிறு பிள்ளைகள் அல்ல" என ஆவேசத்தோடு கூறினான்.

அவரோ ஒரு வார்த்தையும் பேசாமல் வீட்டிலிருந்த ஒரு கரித்துண்டைக் கையில் எடுத்து வந்து அதைத் தன் மகனிடம் கொடுத்தார். மகன் எதிர்பாரமல் கரித்துண்டை கையில் வாங்கிய மாத்திரத்தில் கையெல்லாம் கறைப்பட்டது. கை தவறிய ஒரு சிறு பகுதி கரித்துண்டும் அவனுடைய வெள்ளைச் சட்டையில் வீழ்ந்து கறையை ஏற்படுத்தியது. "கரித்துண்டை கவனத்துடன் கையாள்வது மிகவும் சிரமம் தான் அப்பா" என்று தகப்பனிடம் கூறினான். "ஆம் மகனே! கரித்துண்டு உன்னை சுட்டுவிடவில்லை. ஆனால், உன்னைக் கறைப்படுத்திவிட்டது என்பதை அறிந்து கொள்" என்றார் தகப்பன்.

"ஏமாந்து போக வேண்டாம். கெட்டவர்களின் நட்பு நல்நடத்தையை கெடுத்து விடும்" 1 கொரிந்தியர் 15:33 (புதிய மொழிபெயர்ப்பு)

ஆம்! இது எத்தனை உண்மை! தீயவர்களோடு பழகுவதால் உடனே நாம் தீயவர்களாகி விடுகிறதில்லை. ஆனால், அவைகள் நம்மைக் கறைப்பட்டவர்களாக மாற்றி, காலப்போக்கில் நம்மையும் அத்தீயகுணத்திற்கு சொந்தக்காரர்களாக மாற்றி விடும்.

கோபக்காரனுக்குத் தோழனாகாதே உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே. அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிப்பாய் என்று எச்சரிக்கிறது. நீதிமொழிகள் 22:24,25


அதைப் போன்றே பண ஆசை உள்ளவர்களோடு பழகிப் பாருங்கள். அவர்கள் எப்படி சேர்க்க வேண்டும், இதை கட்ட வேண்டுமென்றே பேசுவார்கள். அதைத் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டேயிருந்தால் நாமும் "ஐயோ! ஒன்றுமே சேர்த்து வைக்கவில்லையே! இனி ஏதாவது முயற்சிக்க வேண்டுமென்ற" எண்ணம் எம்மையும் அறியாமலேயே நமக்குள் வந்துவிடும். அப்போது நாம் நம் தேவன் பேரில் வைக்கும் நம்பிக்கை என்னவாகும்? தேவையில்லாத வீண் கவலைக்கும், விரக்திக்கும் ஆளாகுவோம்.

ஒரு சகோதரன் ஒழுக்கமான ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர். தன் வேலைத்தலத்தில் தீய நண்பர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டார். அந்த நண்பர்கள் அவரைப் பாவ வழிகளில் இழுக்கப் பார்த்த வேளையில், அவர் ஆரம்பத்தில் "நான் ஆண்டவருக்கு துரோகம் செய்ய மாட்டேன்" என்று மறுத்து அவர்களின் பாவகாரியங்களில் ஈடுபாடு இல்லாதவராய் இருந்தார்.

ஆனால், அவர்களோடே சேர்ந்தே இருப்பார். ஒரு நாள் அவர்களுடைய வற்புறுத்தலை தாங்க முடியாமல் அவர்களோடு பாவ காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தார். கடைசியில், அது அவருடைய உயிருக்கே உலையாய் முடிந்தது.

ஆதலால், நாம் சேருகின்ற நண்பர்கள் எமது கிறிஸ்தவ வாழ்விற்கு முட்டுக்கட்டையாக, எமது விசுவாசத்தை குலைக்கிறவர்களாக இருக்கக் கூடாது. நண்பர்களே எமக்கு இல்லாவிட்டாலும் நாம் குறைந்து போகமாட்டோம். ஆனால், கெட்ட நண்பர்களின் சகவாசம் கூடவே கூடாது. அது ஒருநாள் இல்லாவிட்டாலும் இன்னுமொரு நாள் அவர்கள் உங்களை நடுத்தெருவில் நிற்க வைத்துவிடுவார்கள்.

பிரியமானவர்களே! யாரையும் வெறுக்கவோ, அசட்டை செய்யவோ கூடாது. ஆனால், ஒருவர் எப்படிப்பட்டவர் என்று அறியும் முன் அவசரப்பட்டு நெருங்கிய நட்பை ஏற்படுத்தாமல் கவனத்துடன் நடக்கலாம். தேவனுடைய உதவியை நாடுவோம்!



## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| மு.ப. | 8.15 | - | ஞாயிறு பாடசாலை |
| மு.ப. | 9.30 | - | ஆராதனை வேளை |
| பி.ப | 1.30 | - | வாலிபர் கூட்டம் |
| பி.ப. | 4.00 | - | சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி) |
| பி.ப. | 6.00 | - | சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி) |

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# தேவையான வரம் எது?

1 கொரிந்தியர் 14

முதலாம் நூற்றாண்டில் சபையை தேவன் இவ்விதமாகவே போஷித்திருக்கிறார். புதிய ஏற்பாட்டின் பிரதிகள் அவர்களுக்கு இருக்கவில்லை. சபையில் இரட்சிக்கப்பட்ட யூதர்களோடு, இரட்சிப்பைப் பெற்ற அந்நியர்களும் இருந்தனர். சில தருணங்களில் பழைய ஏற்பாட்டு பிரதிகள் வாசிக்கப்பட்டாலும், தேவனிடமிருந்து நேரடியாகவே தேவவாக்கு களைப் பெற்று, ஜனங்களோடு பேசுவது, வழிநடத்துவது மிக, மிக அவசியமாய் இருந்தது. அவைகளே அப்போஸ்தலரின் உபதேசங்களாகவும், இறைவனுடைய வாக்காகவும் இருந்தது.

வசனம் 29, 30 - தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன். எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்

இறைவாக்கின் வெளிப்பாட்டை அவர்கள் குளறுபடியின்றி, ஒழுங்காக உரைப்பதை பார்க்கிறோம்.

வசனம் 39 - அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள். அதாவது, நடைமுறையில் பேசப்பட்ட பாஷைகளையே பேசினார்கள். அதிலும் எந்தவிதமான கூச்சலோ, குளறுபடியோ காணப்படவில்லை.

அப்போஸ்தலர் 2:8-12 வரையிலுள்ள நிகழ்வானது ஒரு அபூர்வமான, ஒரு அடையாளமாக, ஒரு சந்தர்ப்பத்தில், தீர்க்கதரிசன நிறைவேறுதலுக்காக, தேவைக்கமைய நடந்த ஒரு அற்புத நிகழ்வாகும்.

வசனம் 27 - இரண்டு அல்லது மூன்று பேர், அர்த்தம் சொல்கிறவன் என அளவுப்பிரமாணம் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இன்றைய நிலைமை சபைகளில் எப்படி ? எல்லோரும் பேசுங்கள், பேசுங்கள்! என உரத்து சத்தமிடுவதோடு, ஏற்கனவே, சில விநோத வார்த்தைகளை உச்சரிக்கவும், பேசவும் பயிற்றுவித்தும் இருக்கிறார்கள். இதன்மூலம் இவர்கள் தேவனுடைய வசனத்தை மீறி செயல்படுகின்றனர்.

வசனம் 27 - ஒவ்வொருவராய் பேச வேண்டும். ஒருவர் பேசி முடித்தவுடன் தான் இன்னொருவர்.. ஆனால், அந்த தேவ வார்த்தையும் மீறப்படுகிறது.

வசனம் 28 - அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையில் பேசக் கூடாது. ஆனால், அர்த்தஞ் சொல்கிறவன் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அர்த்தமின்றி உளறுகிறார்கள்.

வசனம் 33 - தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், ஆனால், இவர்களுடைய ஆராதனைகளில், கூட்டங்களில் சத்தங்களும், கூச்சல்களும் ஒரு கலவரம் போல் காணப்படுகிறது.

வசனம் 34, 35 - சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு இல்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ளவிரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்-

கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே. என திட்டவட்டமாக வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. இக்காரியத்திலும் தேவநீதி மீறப்படுகிறது.

வசனம் 37 - நான் உங்களுக்கு எழுதுகிறவை கர்த்தரின் கற்பனைகள். இன்னொரு வசனம்: 2 கொரி 2:17 அநேகரைப்போல, நாம் தேவவசனத்தை கலப்பாய்ப்பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்

இவர்கள் முதலாவது, கர்த்தருடைய கட்டளைகளை மதிப்பதில்லை என்பதோடு அவர்களது பிறவிக் கொள்கையானது வேதத்தோடு இன்னும் புதுப்புது வெளிப்பாடுகள் ஊழியர்களிடமிருந்து வெளிப்படவேண்டும். இதிலிருந்து நாம் என்ன பார்க்கிறோம் என்றால், இந்த ஒரு முழுமையான வேதம் அவர்களுக்கு போதாமையாய், திருப்தி இல்லாததாய் இருக்கிறது.

பல உதாரணங்கள் இருந்தும் ஒன்றை மட்டும் அவதானிப்போம்.

ஒரு பிசாசை துரத்த அந்நிய பாஷை பேசவேண்டுமாம். அல்லது தூதர்கள் பாஷையில் பேசாவிட்டால் அவைகளுக்கு புரிந்து கொள்ளமுடியாதாம்.

ஆனால், ஆண்டவராகிய இயேசு என்ன சொல்லுகிறார் “என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். மாற்கு 16:17.

இயேசு பிசாசை அதட்டினார். உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது. அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான். அந்த பிசாசோடு உரையாடவில்லை. இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே அன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டு போகாது என்றார். மத்தேயு 17:21

பேய்களை துரத்தும் ஊழியர்களை பிசாசு முட்டாள்களாக்கி விடுகிறது. அவைகளை துரத்தும் வேத வழிமுறைகளை மீறச் செய்கிறது.

இரண்டாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை சபையின் ஐக்கியங்களில் அந்நிய பாஷைகள் பேசினார்கள் என்பதற்கான எந்தவொரு ஆதாரமும் கிடையாது. ஆனால், அக்கால கட்டங்களிலே தான் மிகச்சிறந்த மிஷனரி பணியாளர்கள் உலகமெங்கும் சென்று மிகச் சிறந்த பணியாற்றினார்கள். ஆனால், பல அருட்பணியாளர்கள் அந்நிய பாஷைகளை கற்று வேதத்தை

- Bro. Neville -

**இவைகளையெல்லாம்**

**(இந்த வரங்களையெல்லாம்)**

**அந்த ஒரே ஆவியானவர்**

**நடப்பித்து,**

**தமது சித்தத்தின்படியே**

**அவனவனுக்குப்**

**பகிர்ந்து கொடுக்கிறார்.**

**1 கொரிந்தியர் 12:11**

# ஆண்டவருடைய மரணம்

ஆண்டவருடைய மரணத்தின் பின்னணியிலுள்ள 7 கோணங்கள்

**அவமானமான மரணம்:**

எபிரெயர் 12:2 - "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து." சிலுவை மரணமானது அவமானத்திற்குரியது. நீங்கள் யோசித்து பாருங்கள்! 33 வயதுடைய ஒரு இளம் மனிதன் ஒரு சிறு ஆடையுடன் சிலுவையில் காணப்படுகிறார். ஆண்கள் பெண்கள் அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாற்கு 14:15 - அப்பொழுது சிலர் அவர் மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள். வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்.

எதற்காக இந்த அவமானம். அவர் நினைத்திருந்தால் அவர்களை அழித்து விட ஒரு நொடி சென்றிருக்காது. அவர் என்னை மீட்பதற்காகவே அவமானத்தை ஏற்றுக்கொண்டார்

ஏசாயா 50:6 - அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன். அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.

**உபத்திரவத்தின் மரணம்:**

எபிரெயர் 2:9,10 - என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாய் இருந்தது. எம்மை மகிமையில் கொண்டு சேர்க்கவே அவர் உபத்திரவத்திற்குள்ளே சென்றார்.

**இரத்த சாட்சியான மரணம்**
**(குற்றம் இல்லாத)**

அப்போஸ்தலர் 2:23/13:28 - அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்.

மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்.

**பரிசுத்த பலியான மரணம்:**

எபிரெயர் 9:14,26 - நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.

அவர் தன்னைத்தானே எமது பாவங்களுக்காக பலியாக ஒப்புக்கொடுத்தார்.

**நம்முடைய பாவங்களை சுமந்த மரணம்:**

ஏசாயா 53: 6,12 - கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.

அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்..

1 பேதுரு 2:24 - நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்.

யோவான் 1:29 - மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்.

**நமக்கு பதிலாக அவருடைய மரணம்:**

எபேசியர் 5: 2 - கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல,

**அன்பினால் ஏவப்பட்ட மரணம்:**

ரோமர் 5: 8 - நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

- Bro. Sureshkumar -

**முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.**

கொலோ-1:21

## பரிசுத்த ஆவியானவருடைய பணிகள்

பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு என்பற்றை குறித்து உணர்த்துகிறார்
யோவான் 16:8

நம்மை புதிதாய் பிறக்கச் செய்கிறார்.
யோவான் 3: 6,7 / தீத்து 3:5

கிறிஸ்துவின் மரணத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணுகிறார்.
ரோமர் 6:3-6

கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணுகிறார்.
1 கொரிந்தியர் 12:13

விசுவாசிகளுக்குள் வசிக்கிறார்.
யோவான் 14:17

சகலத்தையும் கற்றுத் தருகிறார்.
யோவான் 14:26

நம்மை வழிநடத்துகிறார்.
யோவான் 16: 13

கிறிஸ்துவுக்குரியவற்றை நமக்கறிவிக்கிறார்.
யோவான் 16:14

சாட்சி பகிர நம்மை பலப்படுத்துகிறார்.
அப்போஸ்தலர் 1:8

சேவை புரிய வரங்களை, திறமைகளை அருளுகிறார்.
1 கொரிந்தியர் 12: 4 -11

நாம் தேவனுடைய பிள்ளைகளென சாட்சிகொடுக்கிறார்.
ரோமர் 8:16

கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார்.
யோவான் 16:14

# திருச்சபையே! உன்னை நீ அறி!

- Sis. Viji Benavendhoor -

- தேவன் உன்னை தெரிந்துகொண்டார். எபே 1:4
- ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தமமுடைய சுய இரத்தத்தினாலே உன்னை சம்பாதித்தார். அப்போ 20:28
- நீ புது சிருஷ்டியாயிருக்கிறாய். 2 கொரி 5:17
- நீ தேவனுடைய ஆலயமாயிருக்கிறாய். 1 கொரி 3:16
- நீ பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டிருக்கிறாய். எபே 1:14
- நீ தேவனுடைய கரங்களிலும், ஆண்டவர் இயேசுவின் கரங்களிலும் பாதுகாக்கப்படுகிறாய். யோவான் 10:28,29
- நீ கிறிஸ்துவினுடைய சரீரமாயிருக்கிறாய். 1கொரி 12:27
- நீ கர்த்தருடைய பண்ணையாயிருக்கிறாய். 1 கொரி 3:9
- நீ இயேசுவின் மந்தையாயிருக்கிறாய். யோவான் 10: 16
- நீ தேவனுடைய மாளிகையாயிருக்கிறாய். 1 கொரி 3:9
- நீ தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறாய். எபே 2:22
- நீ பிதாவின் அருளைப் பெற்றிருக்கிறாய். யோவான் 6: 65
- நீ பிதாவினால் இழுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறாய். யோவான் 6:44
- நீ சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாய் இருக்கிறாய். பிலி 2:14
- நீ பரிசுத்த ஜாதியாயிருக்கிறாய். 1 பேதுரு 2:9
- நீ தேவனுக்கு சொந்த ஜனமாயிருக்கிறாய். 1 பேதுரு 2: 9
- நீ தேவனால் அறியப்பட்டிருக்கிறாய். யோவான் 10:15
- தேவன் உன்னை இயேசுவோடு எழுப்பியிருக்கிறார். எபேசியர் 2:7
- தேவன் உன்னை இயேசுவோடு உன்னதங்களிலே உட்காரப்பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:7
- பிதா உன்னை இயேசுவிடம் கொடுத்திருக்கிருக்கிறார். யோவான் 6:37
- நீங்கள் தேவனுடைய வீட்டாராயிருக்கிறீர்கள். எபேசியர் 2:19
- நீ உலகத்திலே பரதேசியாயிருக்கிறாய். 1பேதுரு 1:2
- நீ தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கப் போகிறாய். 1 கொரி 5:10
- நீ கடைசி நாளில் எழுப்பப்படப்போகிறாய். யோவான் 6:40
- நீ இயேசுவுக்கு ஒப்பாக மாறப்போகிறாய். 1யோவான் 3:2
- நீ தங்கமயமான வீதியில் நடக்கப்போகிறாய். வெளிப் 21:21
- நீ ஆட்டுக்குட்டியானவரின் வெளிச்சத்தில் வாழப்போகிறாய். வெளி 21:23,24

இப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிற நீ உன் அழைப்பை அறியாமல், அழிந்து போகின்ற உலகப்பொருள், பெருமை, பண ஆசை, ஆடம்பரவாழ்வு, மாம்ச இச்சைகள், சிற்றின்பங்கள் என்று இவைகளுக்குப் பின் ஓடத் தேவையில்லை. தேவன் எங்கள் மீது காட்டிய அன்பை மன்னிப்பை மற்றவர்களுக்கு காண்பித்து மரித்தோரின் கிரியைகளை விட்டு எழுந்திரு! உனக்கு முன் வைத்திருக்கிற சந்தோஷத்தை நோக்கி ஓடு!

# பர்னபா எனும் கதாபாத்திரம்

1. அப்போஸ் 4: 36 - இவன் லேவி வம்சத்தைச் சேர்ந்தவன். பர்னபா என்றால், ஆறுதலின் மகன். இவனது பெயர் யோசேப்பு. ஆதலால், நாம் மற்றவர்களை ஆறுதல்படுத்துகிறோமா? அல்லது வேதனைப்படுத்துகிறோமா?

2. அப்போஸ் 4:37 - தனக்கு உண்டாயிருந்த நிலத்தைவிற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பர்னபா தியாகசீலியான மனிதன்

3. அப்போஸ் 9:26-30 - ஆவிக்குரிய நிலைமையை பகுத்தறியக்கூடிய திறமை-யுடையவனாயிருந்தான். வசனம் 27 - சபையில் பவுலைக் குறித்து நல்லபிப்-பிராயம் இல்லாதபட்சத்தில் பவுலை அவன் கைவிடாதிருந்தான். முக்கியமாக பவுலை குறித்து அவ்வேளையில் சரியான கருத்துகளை முன்வைக்கிறான். ஆதலால், புதிதாக இரட்சிப்பின் அனுபவத்துக்குள் வருகிறவர்களை நாம் எப்படி வழிநடத்துகிறோம் ? நாங்கள் அவர்களுக்கு உறுதுணையாய் இருக்கின்றோமா?

4. வசனம் 27 ஒப்புரவாக்கும் ஒரு தூதனை போன்றவன். அப்போஸ்தலர்களோடு பவுலுக்கு தொடர்பை ஏற்படுத்தினான்.

5. பிற்பாடு, பவுலின் மாபெரும் பணியின் பின்னணியில் பர்னபாவே காணப்பட்டான். அப்படியொருவன் இருந்திராவிட்டால், சாதாரணமாக நாம் சிந்திப்போம், பவுல் எப்படி இருந்திருப்பான்? என்னால் சாதிக்க முடியாதவைகளை இன்னொருவரால் சாதிக்க முடியும். அவருக்கே நாம் முன்னுரிமை வழங்கவேண்டும். பொறாமை, போட்டி மனப்பான்மை இன்றி! இவர் முதன்மை நிலைக்கு வரும்போது என் கதி என்னாகும் என்று நினைப்போமா? அப்போஸ் 11:24 - 26 பவுலை திரும்பவும் அழைத்து வந்து முன்னுரிமை கொடுக்கிறான்.

6. அப்போஸ் 13:2 - ஊழியத்துக்காக பெயர் சொல்லி அழைக்கப்பட்டார்கள். பவுல், பர்னபா என்று மாறுகிறது. கர்த்தருக்காக அவர்கள் அநேக பணிகளை ஆற்றியிருக்கலாம்

7. அப்போஸ் 15: 33 - 36 - இச்சந்தர்ப்பத்தில் பவுலுக்கும், பர்னபாவுக்குமிடையில் யோவான் மாற்குவினால் பிரிவு ஏற்படுகிறது. யோவான் மாற்கு என்பவன் பர்னபாவின் உறவினன் ( கொலோ 4 :10) பர்னபா எப்படிப்பட்ட தேவ பணியாளனாயிருந்தாலும், எம்மைப்போன்றே ஒரு சராசரி மனிதன். ஆதலால், ஊழியர்களின் உயர்வு தாழ்வுகளில் நாம் குறை கூறாமல் இருப்போம்.

- Sis. Anne Jayasundara -

# யார் இந்த சபைக்காரங்க?

- Bro. M. Gnanendren -

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவானவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுகிற ஜனக் கூட்டத்தைப் பார்த்து, உலக மக்கள் அழைக்கின்ற பெயர் தான் சபைக்காரங்க!

அந்த சபைக்காரங்களைக் குறித்து பரிசுத்த வேதாகமத்திலுள்ள அப்போஸ்தலருடைய நடபடிகள் என்னும் நூலில் ஐந்து விதமான காரணப் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுவதை அவதானிக்கலாம்.

1) விசுவாசிகள் (அப் 2: 44)
2) சீஷர்கள் (அப் 6: 1)
3) பரிசுத்தவான்கள் (அப் 09: 32)
4) சகோதரர்கள் (அப் 10: 23)
5) கிறிஸ்தவர்கள் (அப் 11: 26)

**விசுவாசிகள்**

“விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.” இங்கே சபையார் விசுவாசிகளென குறிப்பிடப்பட்டுள்ளனர். அதாவது, விசுவாசிக்க வேண்டியவற்றை விசுவாசிக்க வேண்டிய வகையில் விசுவாசிக்கின்றவர்களே மெய்யான விசுவாசிகளாவார்.

“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.” (எபிரெயர் 11:1,3)

“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16)

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. (யோவான் 3: 18)

ஆம்! “காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 1: 15)

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும். (எபிரெயர் 11:6)

**சீஷர்கள்**

“அந்நாட்களில் சீஷர்கள் பெருகின போது” (அப் 6:1) இந்த வசனத்தில் சபையார் சீஷர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். தமது குருவின் அல்லது

போதகரின் அடிச்சுவடுகளைப் பின் பற்றின ஜனங்களைப் பார்த்து "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருந்தால், அதினால் நீங்கள் எனது சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார் (யோவான் 13:35). மேலும், "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவான் 15:8)

மேலும், "சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்" (லூக்கா 06:40)

யாதொருவன் என்னிடத்தில் வந்து, ...தனக்கு உண்டானவைகளையும், ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான். (லூக்கா 14: 26, 27, 33)

**பரிசுத்தவான்கள்**

பேதுரு, லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான் (அப் 9: 32)

இங்கே சபையார் பரிசுத்தவான்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இது இயேசு கிறிஸ்துவினால் அவர்கள் அடைந்த சிலாக்கியமாகும். ஏனெனில், இந்த உலகத்தில் அனைத்து மனிதர்களும் கடவுளுடைய முன்னிலையில் பாவிகளாக பிறந்து பாவிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதாவது சபைக்கு வெளியில் எல்லோரும் பாவிகள் ஆனால், அவர்கள் சபைக்கு உள்ளே வந்துவிட்டால், அவர்களைக் கடவுள் பரிசுத்தவான்களாகத் தீர்ப்பிடுகின்றார். காரணம் சபையானது பரிசுத்தமுள்ள மகிமையின் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுய இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட அவருடைய சரீரமாயிருக்கிறது.

"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும் படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப்பிரித்தெடுத்தேன்." (லேவி 20:26)

பரிசுத்தவான்களுக்கு ஏற்ற படி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள். (எபேசியர் 5:3,4) ஏனெனில், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.( எபிரெயர் 12:14)

**சகோதரர்கள்**

அப்பொழுது பேதுரு, யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனே கூடப் போனார்கள். (அப் 10:23) இங்கே சபையார் சகோதரர்கள் எனக் குறிப்பிடப்படுகிறார்கள். மாம்சத்தின்படி, பிறந்த பல்வேறு மக்கள் கூட்டத்திலிருந்து தேவ வசனத்தினாலும், தேவ ஆவியினாலும் மறுபடி பிறந்த அனைவரும் சகோதரர்களாயிருக்கிறார்கள். இங்கே ஜாதி, மத பேதம் இல்லை. உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனும் பாகுபாடும் இல்லை. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமும் இல்லை. எல்லாரும் ஒரே குடும்பமாய் இணைக்கப்பட்டுள்ளார்கள். இது மாம்சத்தின்படியான இரத்த உறவிலும் மேலான உறவு. குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்துவின்

விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டு கூட்டிச் சேர்க்கப்பட்ட தூய உறவு. ஆகையால் தான், “சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது” (எபிரெயர் 13:1) “சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாய் இருங்கள் (ரோமர் 12:10). என்றெல்லாம் ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளது. நீங்களோ ரபீ என்று அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள் (மத்தேயு 23:8) என இயேசுவானவர் சொன்னதை சிந்தையில் கொள்ளுவோம்.

### கிறிஸ்தவர்கள்

முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. (அப் 11:26) இங்கே சபையார் கிறிஸ்தவர்களென அழைக்கப்படுகிறார்கள். அதாவது அவர்கள் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக தங்களை விளங்கப்பண்ணுகிறார்கள். “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. (2 கொரி 5:17)

ஆம்! கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலாத் 2:20) என்ற நிச்சயத்தை உடையவனே மெய்க்கிறிஸ்தவன். ஏனெனில், கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8:9)

எனவே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலிப் 2: 5)

ஆம்! தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபேசியர் 5: 26,27)

## எபிரேயர் புத்தகத்தில் உள்ள நித்தியமானவை ஏழு

நித்திய ஆசாரியர்
(என்றென்றைக்கும் ஆசாரியர்)
எபிரேயர் 5:6

நித்திய இரட்சிப்பு
எபிரேயர் 5:9

நித்திய நியாயத்தீர்ப்பு
எபிரேயர் 6:2

நித்திய மீட்பு
எபிரேயர் 9:12

நித்திய ஆவி
எபிரேயர் 9:14

நித்திய சுதந்திரம்
எபிரேயர் 9:15

நித்திய உடன்படிக்கை
எபிரேயர் 13:20

# ஒருவரையொருவர் புரிந்து வாழுதல்

ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். (பிரசங்கி 4:9)

இரண்டுபேர் சேர்ந்தால் அவர்கள் இருமடங்கு பணியை நிறைவேற்றுவார்கள் (Living Bibile). அதாவது, இரண்டுபேர் சேர்ந்தால் இருமடங்கு அதிகமாய் நிறைவேற்றுவார்கள் என்பதே பொருள்.

அதேபோல் ஒருவன் விழுந்தால், வேறொருவன் அவனை தூக்கிவிடுவான் என்று பிரசங்கி கூறுகிறான்.

தேவனுடைய பிள்ளைகளே! ஒருவன் விழும்போது அவனை தூக்கிவிட ஒருவனும் இல்லாதிருந்தால் எவ்வளவு பரிதாபம் என்று யோசித்துப்பாருங்கள். இதற்காகவே தேவன் நம் திருமணத்தில் கணவனையும் மனைவியையும் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத்துணையாக வைத்திருக்கிறார்.

தேவபிள்ளையே, ஒருவர் விழும்போது மற்றவர் பார்த்து குறைகூறுவதற்கல்ல அவரை தூக்கிவிடுவதற்கே அவர் உங்களை இணைத்துள்ளார்.

கணவன் மனைவியாக நீங்கள் சேர்ந்து வாழும்போதுதான் ஒருவரிலுள்ள குறைகளை ஒருவர் காண முடியும். ஆனால், உங்கள் குடும்பத்தை விட்டு நீங்கள் வெளியே வரும்போது மற்ற தம்பதியினரிடத்திலே காணும் குறைகளோ ஒரு சதவீதம் இருப்பதுபோல் காணப்படும். ஆனால், உங்கள் கணவரிடத்திலோ மனைவியினடத்திலோ ஏராளமான குறைகள் இருப்பதுபோல் தோன்றும். ஆனால், அது நூற்றுக்கு நூறு பொய் என்பதை மறந்துவிடாதே.

உங்கள் ஐக்கியத்தை சீர்குலைக்கும் சில காரியங்கள்:

1. கணவன் பிறர் மனைவியை புகழ்தல். ஒரு கணவன் வேறொரு ஸ்திரீயை புகழ்வது ஒரு கெட்ட குணம். உதாரணம்: அவள் அழகு, வீட்டை சுத்தமாய் வைத்திருப்பது, சமையல் போன்றவற்றை புகழ்தல் பிரச்சினையை கொண்டு வரும்.

2. மனைவி பிறர் கணவனை புகழ்தல் உங்கள் குடும்ப ஐக்கியத்தை குலைக்கும். மனைவி வேறொரு மனிதனை புகழ்தல் கூடாது. உதாரணம்: அவர் சுறுசுறுப்பு, உத்தியோகம் மற்றும் வேறு திறமைகளை புகழ்தல்.

எனவே நாம் இவற்றை தவிர்த்து, ஒருவரை ஒருவர் தாங்கி, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வோம் (ரோமர் 15:7). நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் கலாத்தியர் 5:15.

- Bro. Chandran -

# சிறு துரும்பு பெரு உத்திரம்

புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்.
(ரோமர் 12: 8)

புத்தி சொல்லுதல் என்பது வேத வசனத்தில் நிலைத்திருக்கிற ஒவ்வோர் கிறிஸ்தவனிடத்திலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஓர் பண்பாகும். இதை குறித்து பவுல் தன் நிருபங்களில் அநேக இடங்களில் எழுதியிருக்கிறார். "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லி கொண்டிருங்கள்" என எபேசியருக்கும் (எபேசியர் 5:19) "சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்." என எபிரேயருக்கும் (எபிரேயர் 10:25) வயதிற்கேற்றாற்போலும் ஊழியத்திற்கேற்றாற்போலும் சபையிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் புத்தி சொல்ல வேண்டும் என தீமோத்தேயுவிற்கும் பவுல் கூறுகிறார்.

புத்தி சொல்லுதலில் புத்தி சொல்பவர் மற்றும் புத்திமதியை பெறுபவர் ஆகிய இருசாராரின் பங்களிப்பும் உள்ளது.

புத்தி சொல்லுதலானது நியாயந்தீர்க்கும் மனப்பான்மையுடனோ குற்றம் பிடிக்கும் எண்ணத்துடனோ செய்யப்படலாகாது. மாறாக, கிறிஸ்துவுக்குள் நம் உடன் விசுவாசிகளை பக்தி விருத்தி அடையச்செய்வதற்காகவும் கிறிஸ்துவுக்குள் அவர்களை பலப்படுத்தி கட்டியெழுப்புவதற்காகவும் சபையின் வளர்ச்சியை மனதில் கொண்டு செய்யப்படவேண்டியதாகும். அதில் ஆண்டவரின் அன்பு கலந்திருக்க வேண்டும்.

அதே போல, புத்திமதியைப் பெறுபவரும் அதைத் தாழ்மையான மனதுடனே பெற்றுக்கொள்ள வேண்டும். சொல்லப்படும் அறிவுரையானது தனக்கு பொருத்தமாயிருப்பின் அதை ஏற்றுக்கொண்டு தன்னை கர்த்தருக்கேற்ற விதத்தில் மாற்றிக்கொள்ள வேண்டும். ஒரு வேளை அது தனக்கு பொருத்தமற்றதென்றாலும் அந்த புத்திமதியை சொல்லியவர் மீது கோபங்கொள்ளாது அதை பிரயோஜனமானதாகக் கருத வேண்டும்.

ஆனால், புத்திமதி சொல்வது இலகுவானது. அதைக்கேட்பதும் ஏற்பதும் மிக மிக சிரமமானதாகும். அதிகமான நேரங்களில் நமக்கு யாராவது ஓர் புத்திமதியை சொல்லும் போது, நமது உடனடி உணர்வாய் கோபமும் முதலாவது எண்ணமாய் புத்திமதியைக் கூறுபவரின் தகுதியுமே உதிக்கும். முதலில் நமக்கு புத்திமதியைக் கூறுபவரை நியாயந்தீர்த்து விட்டு அதன் பிறகு தான் கூறிய புத்திமதியைப் பற்றி யோசிக்கவே நாம் ஆரம்பிப்போம். அதிலும் முக்கியமாக, "மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்." என ஆண்டவர் இயேசு (மத்தேயு 7:5) சொன்ன வார்த்தையை நாம் பயன்படுத்துவது உண்டு.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகளை சொல்லியது புத்திமதியை கேட்பவர்களுக்கு அல்ல. புத்திமதி சொல்பவர்களுக்கு. எனவே, புத்திமதியை கேட்பவர்கள் இந்த வார்த்தையை தங்களுக்கு

சாதகமாக பயன்படுத்திக்கொள்ளாமல் தாழ்மையான மனதுடன், சொல்லப்பட்ட புத்திமதியை ஏற்றுக்கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

மாறாக, "நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்." என ஆண்டவர் இயேசு மத்தேயு 23:3ல் சொன்ன வார்த்தையே அதிக பொறுத்தமானதாயிருக்கும்.

தங்களின் தவறுகளை திருத்திக்கொண்டு அதன்பின்பு மற்றவர்களுக்கு புத்திமதி சொல்வது புத்திமதி சொல்பவர்களின் பொறுப்பாகும். ஆனால், தனக்கு புத்திமதி சொல்பவர்களின் தவறுகளை நியாயந்தீர்ப்பது நம் பொறுப்பல்ல.

என் கண்ணில் இருப்பது துரும்பு தானே என்று சொல்லி சொல்லியே நாம் காலத்தைக் கழித்துக்கொண்டிருப்போமானால் காலங்கள் கடந்து போனதும் நம் கண்ணில் சேர்ந்த சிறு துரும்புகள் பெரு உத்திரமாக உருவெடுத்து நிற்கும். அந்நிலையில் நாம் யாருக்காவது புத்தி சொல்ல முற்படுவோமாயின் மத்தேயு 7:5 நமக்கே பொருத்தமானதாயிருக்கும்.

எனவே, நாம் நமக்கு புத்தி சொல்வது யாராயிருந்தாலும், வயதிலும் ஆவியிலும் மூத்தவரோ அல்லது இளையவரோ, அவர் சொல்வது வேத வசனத்தின் அடிப்படையிலானது என்றால் அதை நாம் தாழ்மையோடு ஏற்றுக்கொண்டு இப்படியாகவே நாம் கர்த்தருக்குள் வளருவோம்.

அதே வேளை, "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக்கீழ்ப்படுத்துகிறேன்." என பவுல் 1 கொரிந்தியர் 9:27ல் சொன்னது போல நாமும் நம் வாழ்க்கையை கர்த்தருக்கு ஏற்ற விதமாய் மாற்றி அமைத்துக்கொள்வோம்.

- Bro. Varaprasath -

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ........................................................................................

**முகவரி:** ........................................................................................

........................................................................................

........................................................................................

**ஒப்பம்:** ........................................................................................





Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com


கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.